# வண. எஸ். ஜெபநேசன் சேகரங்களை எண்ணிமப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த வெளியில் அனைவரும் பயன்பெறும் வகையில் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை மேற்கொள்ளும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

வண. எஸ். ஜெபநேசன் (பிறப்பு: 28 மார்ச் 1940) தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஓய்வு பெற்ற பேராயர். இவர் யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராகவும் பணியாற்றியவர். பல பட்டங்களைப் பெற்ற இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் பல நூல்களையும் எழுதியுள்ளார். இவர் அமெரிக்க மிஷன் தொடர்பாகவும், கிறித்தவம் தொடர்பிலும் பல நூல்களை ஆக்கியுள்ளார்.

இவர் நூல்கள் மேலுள்ள தனியாத ஆர்வம் காரணமாக பல்வேறு ஆவணங்களை பாதுகாத்து வைத்துள்ளார். உதாரணமாக 1842 ஆம் ஆண்டிற்குரிய சொற்களஞ்சியம் , சூடாமணி நிகண்டு, Lease wise foldings, 1850 ஆம் ஆண்டிற்குரிய பைபிளின் மொழிபெயர்ப்பு , Documents of American Ceylon mission , உடுவில் பெண்கள் கல்லூரியினது அறிக்கைகள், வரைபடங்கள், அமெரிக்க மிஷனரியின் கடிதங்கள் ஆகியவற்றை குறிப்பிடலாம்.

## செயற்றிட்ட நோக்கம்

வண. எஸ். ஜெபநேசன் அவர்களது தனிப்பட்ட ஆவணங்கள் மற்றும் சேகரங்கள் என்பவை முன்னோர் ஆவணகங்களுக்குள் உள்ளடங்கக்கூடிய முக்கிய ஆவணங்களாக காணப்படுகின்றன. இவற்றை எண்ணிமப்படுத்தி பாதுகாத்தல் மிக அவசியமாகும்.

## செயற்றிட்ட அடைவுகள்

இச் செயற்றிட்டத்தின் காலவரையானது வண. எஸ். ஜெபநேசன் ஆவணங்களின் பக்க எண்ணிக்கை அடிப்படையில் தீர்மானிக்கப்படும். இக்காலப்பகுதிக்குள் அவர்களது சொந்த படைப்புகள் மற்றும் அவரது தனிப்பட்ட ஆவண சேகரங்கள் என்பவை எண்ணிமப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படும்.

- அனைத்து ஆவணங்களும் எண்ணிமப்படுத்தப்பட்டு உரிய செயற்றிட்ட முகப்பில் இணைக்கப்பட்டு இலவச அணுக்கத்திற்கென வழங்கப்படும்.
- ஆய்வாளர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களது ஆய்வு நடவடிக்கைகளுக்கு ஏற்ற வகையில் நூலக அறிவியலுக்கேற்ற வகையில் ஆவணங்கள் வகைப்படுத்தப்படும்.

## எதிர்பாக்கப்படும் செலவீனம்

**LKR 4,657,574**

மேலதிக விபரங்களுக்கு
**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**